இயக்குநர், மோட்டார் வாகன பராமரிப்புத் துறை, சென்னை-42
அவர்களின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர் : திரு. K. செந்தில்வேல், B.E.,

செ.மு.ஆ.எண். அ2 / 11769 / 2024-5

நாள் : 03.10.2024

பொருள் : பணியமைப்பு - மோட்டார் வாகன பராமரிப்புத் துறை - இயக்குநர் அலுவலகம் - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டு இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு தற்காலிகமாக பணியமர்த்தப்பட்ட திரு. ரா. முத்துக்கிருஷ்ணன், இளநிலை உதவியாளரின் பணிக்காலத்தை இளநிலை உதவியாளர் பதவியில் முறைப்படுத்தி ஆணைகள் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை :

1. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய கடித எண்.1962 / PSD-D2 / 2019, நாள் 25.08.2023
2. இயக்குநரது செ.மு.ஆணை எண்.அ2/ 10647 / 2023-5 நாள் 18.11.2023
3. இயக்குநர் அலுவலக அ.மு.சா.கடித எண். ஊ4 / 9396 / 2024 நாள் 30.07.2024

**********

பார்வை 1ல் காணும் கடிதம் வாயிலாக தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் இளநிலை உதவியாளர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட திரு. ரா. முத்துக்கிருஷ்ணன், பார்வை 2ல் காணும் இயக்குநரின் செயல்முறை ஆணைகள் வாயிலாக மோட்டார் வாகன பராமரிப்புத் துறையில் சென்னை இயக்குநர் அலுவலகத்தில் தற்காலிகமாக இளநிலை உதவியாளராக பணியமர்த்தப்பட்டதைத் தொடர்ந்து, அன்னார் இத்துறையில் **20.11.2023** முற்பகல் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்தார்.

பார்வை 3ல் காணும் இயக்குநர் அலுவலக ஊ பிரிவு கடிதம் வாயிலாக பெறப்பட்ட பரிந்துரையுடன் கூடிய பிரேரணையை தொடர்ந்தும் திரு. ரா. முத்துக்கிருஷ்ணன், இளநிலை உதவியாளர் பதவிக்குண்டான விதிகளின் தேவைகளை பெற்றுள்ளதாலும் அன்னாரது பணிக்காலம் இளநிலை உதவியாளர் பதவியில் அன்னார் அப்பதவியில் சேர்ந்த நாளான **20.11.2023** முற்பகல் முதல் முறைப்படுத்தப்பட்டு அந்நாள் முதல் அவர் இரண்டு ஆண்டு அலுவல் காலத்திற்கு தகுதிகாண் பருவத்தில் இருப்பார் என்றும் அவ்வாறான தகுதிகாண் பருவ காலத்தை அன்னார் முறைப்படுத்தப்பட்ட தேதியிலிருந்து தொடர்ந்து மூன்று ஆண்டுகளுக்குள் முடிக்க வேண்டும் என்றும் ஆணையிடப்படுகிறது.

.....2

மேலும் பார்வை 1ல் காணும் அரசுப்பணியாளர் தேர்வாணையக் கடிதத்தில் தெரிவித்தவாறு "இந்த பணிவரன்முறை ஆணைகள் Civil Services Examination - IV தெரிவுகள் தொடர்பாக சென்னை / மதுரை உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளின் (WPs) தீர்ப்புக்கு உட்பட்டதாகும்" எனத் தெரிவிக்கப்படுகிறது.

( "The above regularization is subject to the outcome of the WPs pending on the files of the Hon'ble High court of Madras/Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to the recruitment to the post included in Combined Civil Services Examination - IV .

(ஒம்) கொ. செந்தில்வேல்
இயக்குநர்

பெறுநர்

திரு. ரா. முத்துக்கிருஷ்ணன், இளநிலை உதவியாளர்,
இயக்குநர் அலுவலகம், மோ.வா.ப.துறை., சென்னை-42

நகல்

துணை இயக்குநர் (நிர்வாகம்), இயக்குநர் அலுவலகம், மோ.வா.ப.துறை., சென்னை-42
அலுவலக மேலாளர், இயக்குநர் அலுவலகம், மோ.வா.ப.துறை., சென்னை-42
F பிரிவு கண்காணிப்பாளர், இயக்குநர் அலுவலகம், மோ.வா.ப.துறை., சென்னை-42
F4 இருக்கையாளர், இயக்குநர் அலுவலகம், மோ.வா.ப.துறை., சென்னை-42.

(திரு. ரா. முத்துக்கிருஷ்ணன், இளநிலை உதவியாளர், இயக்குநர் அலுவலகம் மே.வா.ப.துறை., சென்னை என்பவரது பணிப்பதிவேடு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது)

அ2 இ.கோப்பு

/ஆணைப்படி/

3/10/24
துணை இயக்குநர்(நிர்வாகம்)

03/10/2024